## 14

# பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதல்

### (யோவான் 16)

*"இன்னும் அநேகங்காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லவேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள். சத்தியஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்" (வசனங்கள் 12-13).*

இயேசு, தாம் பிரிந்து சென்ற பின்பு தமது அப்போஸ்தலர்களுடன் இருக்கும்படி பரிசுத்த ஆவியானவரை அனுப்புவதாக அவர்களுக்கு வாக்களித்திருந்தார். இயன்ற வரையில் மாபெரும் உறுதிப்பாட்டை அப்போஸ்தலர்களுக்குத் தரும் வகையில் அவர் இந்த வாக்குத்தத்தத்தைச் சொற்றொடராக்கம் செய்திருந்தார்: "நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன்; நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும்; நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்; நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்" (16:7). மேலும் அவர், தமது தெய்வீகத்துவம், ஊழியம், மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றைப் பற்றி ஆவியானவர் இந்த உலகத்திற்குக் கண்டித்து உணர்த்துவார் என்றும் அவர்களிடம் கூறியிருந்தார் (16:8-11). இயேசுவின் செய்தியை மறுதலித்தலில் உலகத்தின் பாவத்தையும், தேவனுடைய நீதிமானான அவரை ஆக்கினைக்கு உட்படுத்தியதில் அதின் துன்மார்க்கத்தையும், ஆவியானவர் இந்த உலகத்திற்குக் காண்பிக்க வேண்டி இருந்தது. அவர் கொண்டு வந்திருந்த சத்தியத்தை ஏற்றுக்கொள்ள அவர்கள் மறுத்ததின் காரணமாக, அவர்கள் மீது விழுந்திருந்த நியாயத்தீர்ப்பை அவர் தெளிவாகக் கவனம் குவிக்கக் கொண்டுவருவார்.

இந்த உரையாடலின் தொடர்ச்சியாக இயேசு, பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்களை வழிநடத்தி அவர்களின் பணிப்பொறுப்பிற்குத் தகுதியான தூதர்கள் ஆகும்படி செய்வார் என்றும் தமது அப்போஸ்தலர்களுக்கு வாக்களித்தார். அவர்களுக்கு அவர் எல்லா விஷயங்களையும் வெளிப்படுத்தக் கூடாதவராக இருந்தார், ஆனால் தமது சத்தியத்தின் பாதையில் அவர்களின் பாதங்களை அமைத்து வைத்திருந்தார். ஆவியானவரின் வருகையில் அவர் (ஆவியானவர்), அவர்களுக்கு அவசியமான கூடுதல் சத்தியங்கள் யாவற்றையும் வெளிப்படுத்துவார். இயேசுவின் மரணம், அவரது உயிர்த்தெழுதல் மற்றும் பெந்தெகொஸ்தே நாளுக்குப் பின்பு, அப்போஸ்தலர்கள் தங்களுக்குக் கர்த்தர் வெளிப்படுத்த விரும்பிய முழு வெளிப்பாட்டையும் புரிந்துகொள்ளக் கூடிய நிலையில் இருப்பார்கள்.

*ஆவியானவர் அவர்களிடம் வரும்போது, குறிப்பாக அவர்களுக்கு அவர் என்ன செய்வார்?*

## சகல சத்தியத்திற்குள்ளும்

*ஆவியானவர் அவர்களை "சகல சத்தியத்திற்குள்ளும்" வழிநடத்துவார். இயேசு, "சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்" என்று கூறினார். இவ்விடத்தில் கிரேக்க மொழியில் ("the") என்ற சுட்டுச் சொல் உள்ளடங்கி இருக்கிறது, இது இயேசுவும் ஆவியானவரும் உண்மையான சத்தியத்தை வெளிப்படுத்தினர் என்று வலியுறுத்துகிறது.*

*பரிசுத்த ஆவியானவரால் அளிக்கப்பட இருந்த உதவியானது இரு திசைகளை நோக்கியதாக, பின்னோக்கியும் முன்னோக்கியும் கண்ணோக்குவதாக இருந்தது. அப்போஸ்தலர்களுக்கு இயேசு போதித்திருந்த யாவற்றையும் ஆவியானவர் அவர்களின் நினைவுக்குக் கொண்டு வருவார். அவர்கள் தங்களுக்கு இயேசு கூறியிருந்த எந்த ஒரு விஷயத்தையும் தங்கள் சிந்தைகளில் இருந்து நழுவவிட அனுமதிக்கப்பட இயலாது. அப்போஸ்தலர்கள் இயேசுவிடமிருந்து கற்றுக்கொள்ளத் தயாராக இராதிருந்த, [ஆனால்] அவர்கள் அறிய அவசியமாயிருந்த விஷயங்கள் யாவற்றையும்கூட ஆவியானவர் அவர்களுக்கு வெளிப்படுத்துவார். அவர்களுக்கு அவர் [இயேசு], "என் நாமத்தினாலே பிதா அனுப்பப் போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்" என்று தகவல் தெரிவித்து இருந்தார் (14:26).*

*இந்த வார்த்தைகள் அப்போஸ்தலர்களுக்கு எவ்வளவு தனிச்சிறப்பு வாய்ந்தவையாக இருந்திருக்க வேண்டும்! இவைகள் அப்போஸ்தலர்களுக்குத் தரப்பட இருந்த அதிகாரத்தை மறைமுகமாக உணர்த்தின. அவர்கள் செய்தியாளர்களாக இருந்து, ஆவியானவரால் அருளப்பட்டசெய்தியை எடுத்துரைக்க வேண்டியிருந்தது. அத்துடன் கூடுதலாக, இந்த வார்த்தைகள், அப்போஸ்தலர்கள் பிரசங்கித்துப் போதிக்க வேண்டிய செய்தியின் முழுமைத்தன்மையை வலியுறுத்தின. அவர்கள் "*சகல* சத்தியத்திற்குள்ளும்" (என்னால் வலியுறுத்தப்படுகிறது) - சத்தியத்தின் முழுமைத்தன்மைக்குள் - வழிநடத்தப்படுவார்கள். முதல் நூற்றாண்டிலும் அதைத் தொடர்ந்து வந்துள்ள நூற்றாண்டுகளிலும், சபைக்கு அவசியமான சகல சத்தியமும் அவர்களுக்கு வெளிப்படுத்தப்படும். யூதா தமது உரையைக் கேட்டவர்களை, "பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக நீங்கள் தைரியமாய்ப் போராடவேண்டுமென்று" வேண்டிக் கேட்டுக்கொண்டார் (யூதா 3).*

## தேவனுடைய சித்தத்தின்படி

*பரிசுத்த ஆவியானவர் எந்த போதனையையும் தோற்றுவிக்க அல்ல, ஆனால் தேவனுடைய சித்தத்தின்படியே பேச வேண்டியிருந்தார். இயேசு, "அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்" என்று கூறினார் (16:13). ஆவியானவர் தம்மை மகிமைப்படுத்திக் கொள்ளவோ, தம்மில் "இருந்தே" பேசவோ அல்லது தமது சொந்தத் திட்டத்தை இடவோ வரவில்லை.*

மாறாக தாம் கூறும்படி பிதாவானவர் தமக்குக் கொடுத்திருந்ததைப் பேசுதல் என்பதே அவரது நோக்கமாக இருந்தது. இயேசுவைப் பொறுத்த மட்டில் இருந்தது போன்றே, ஆவியானவரும் தமது சொந்தத்தில் இருந்து எதையும் போதிக்க மாட்டார். இயேசு தமது ஊழியத்தின் முந்திய பகுதியில், "நான் என் சுயமாய் ஒன்றுஞ் செய்கிறதில்லை; நான் கேட்கிறபடியே நியாயந்தீர்க்கிறேன்; எனக்குச் சித்தமானதை நான் தேடாமல், என்னை அனுப்பின பிதாவுக்குச் சித்தமானதையே நான் தேடுகிறபடியால் என் தீர்ப்பு நீதியாயிருக்கிறது" என்று கூறியிருந்தார் (5:30). பிதாவின் சித்தத்தை நிறைவேற்றியிருந்த இயேசுவின் ஊழியத்தை உயர்த்திப்பிடித்து அதை விரிவாக்கம் செய்தலே ஆவியானவரின் பணிப்பொறுப்பாக இருந்தது.

ஆவியானவர் தாம் போதித்த எந்த விஷயத்தையும் தாமே புதிதாக உருவாக்க மாட்டார். மாறாக, மிக அதிகமான தகவல்களைப் பெறுவதற்கு அப்போஸ்தலர்கள் போதுமற்றவர்களாக இருந்ததன் காரணமாக இயேசுவினால் செய்ய முடிந்திருந்ததைக் காட்டிலும் மிகவிரிவான மற்றும் மிக முழுமையான கருத்தில் சத்தியத்தை அவரால் விரித்துரைக்க முடிந்தது. அவர்களிடத்தில் இயேசு பேசிக் கொண்டிருந்த காலகட்டத்தின்போது, அவர்கள் முழுமையான சத்தியம் என்ற பாரத்தைத் தாங்க இயலாதவர்களாக இருந்தனர். இயேசுவும் ஆவியானவரும் உலகத்திற்குக் கொண்டுவந்த சத்தியம் என்பது சத்தியத்தின் அதே பொருளாக இருந்தது; இருப்பினும் ஆவியானவர் இயேசுவைப் பின்பற்றி, வெளிப்பாட்டை மிக முழுமையானதாகச் செய்தார். அவர் சபையுடன் தங்கியிருந்து உலகத்தில் சத்தியத்தை நிலைநிறுத்தும்படி அனுப்பப்பட்டவராக இருந்தார்.

## தேவனுடைய நித்திய தீர்மானத்தைக் காத்துக்கொள்ளுதலில்

எதிர்காலத்தில் வைக்கப்பட்டிருந்தது என்ன என்பதை அப்போஸ்தலர்களுக்குப் பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்துவார். இயேசு, "அவர் ... வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்" என்று கூறினார் (16:13). தேவனுடைய நித்திய தீர்மானம் முழுமையாக சரியான இடத்தில் வைக்கப்பட்டிருந்தது. முற்பிதாக்களின் மற்றும் மோசேயின் யுகங்களினுடைய நீண்ட ஆண்டுகளினூடே, தேவன் தமது மாபெரும் திட்டத்தைக் கொண்டுவர செயல்பட்டிருந்தார். இப்போது காலம் நிறைவேறிய நிலையில் (கலாத்தியர் 4:4), எல்லாருடைய, எல்லாக் காலங்களுடைய மற்றும் எல்லா மக்களுடைய பாவங்களுக்குமான மிகமேன்மையான பலியை மேசியா செலுத்த வேண்டியிருந்தது. இந்த நிறைவான பலி என்பது கடைசியாகத் தேவனை, உண்மைநிலையில் "நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்" என்று கூறவைக்கும் (எரேமியா 31:34). பழைய ஏற்பாட்டுக் காலங்களின் ஒவ்வொரு பலியும், இயேசுவின் பலியிலேயே தனது நிறைவேற்றத்தைக் கண்டறியும். குமாரன் என்ன செய்திருந்தார் என்பதைத் தெளிவாக்குவதற்கு, உலகத்திற்கான தேவனுடைய தொடர்ந்து செயல்படும் திட்டத்தின்படி என்ன நடைபெற வேண்டும் என்பதை வெளிப்படுத்துவதற்கு மற்றும் கிறிஸ்தவ யுகம் முழுவதிலும் இயேசுவின்

*கர்த்தத்துவத்தைப் பராமரிப்பதற்குப் பரிசுத்த ஆவியானவர் வந்தார்.*

## முடிவுரை

*உலகத்திற்கு முன்பாகவும் சபையின் கரங்களிலும் ஆவியானவர் சத்தியத்தை வைப்பார் மற்றும் முன்வைக்கப்பட்ட நாட்களினூடே சபைக்கான வழிநடத்துதலையும் அவர் அருளுவார். சபையானது நம்பி எதிர்பார்க்கக் கூடிய எதிர்காலத்தைப் பற்றியும் அவர் வெளிப்படுத்துவார். சபையானது, "திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரிக்கப்படவும்," சத்தியத்தினால் பரிசுத்தமாக்கப்படவும் வேண்டியிருந்தது. இந்தப் பரிசுத்தமாக்குதலே முடிவுக்காலத்தில் சபையைக் கிறிஸ்து அதன் சகல மகிமையிலும் தமக்கு முன்னிறுத்திக் கொள்ளக் கூடியதாக்கும். சபையானது வசனத்திற்குக் கீழ்ப்படிதல் மூலமாக, கர்த்தரை சந்திக்க ஆயத்தமாக்கப்படும், அது கறைதிரை முதலானவைகள் ஒன்றுமிராமல் இருக்கும்; அவர் அதைத் தமக்கென்று ஏற்றுக்கொள்ள வரும்போது, அதைப் பரிசுத்தமும் பிழையற்றதுமாக காண வேண்டும் என்றே அவர் விரும்புகிறார் (எபேசியர் 5:26, 27).*

*இயேசுவின் வார்த்தைகள் அப்போஸ்தலர்களுக்கு எவ்வளவு ஊக்கம் அளிப்பதாக இருந்திருக்க வேண்டும்! அவரது அறிவிப்பானது, அவர்கள் தனித்து விடப்பட்டு இருக்கவில்லை என்று அவர்களை உணர்ந்தறியச் செய்தது. அவர்களை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்தவே பரிசுத்த ஆவியானவர் அனுப்பப்பட்டார். அவர் இயேசு செய்திருந்தது போன்றே, தொடர்ந்து தேவனுடைய செய்தியை அப்போஸ்தலர்களுக்கு வெளிப்படுத்துவார் மற்றும் எதிர்காலத்தில் வைக்கப்பட்டிருந்தது என்ன என்பதைக் காண அவர்களின் கண்களை திறப்பார். பரிசுத்த ஆவியானவரின் வருகைக்காக நாம் தேவனுக்கு நன்றி செலுத்துவோமா!*

---

*"அப்பொழுது பேதுரு பதினொருவரோடுங்கூட நின்று, அவர்களை நோக்கி, உரத்த சத்தமாய்: யூதர்களே, எருசலேமில் வாசம்பண்ணுகிற ஜனங்களே, நீங்களெல்லாரும் அறிந்து கொள்வீர்களாக, என் வார்த்தைகளுக்குச் செவிகொடுங்கள். ... தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்டபடியே இது நடந்தேறுகிறது" (நடபடிகள் 2:14-16).*

*"அதற்குப் பின்பு நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்; அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களையும், உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள்" (யோவேல் 2:28).*